தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆடி 2, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 ஜூலை 18, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்."

என் குடிமக்களை உயர்த்துவேன் என்று மிகுந்த மன உறுதியுடன் முயற்சி செய்யும் ஒருவருக்குத் தெய்வமே வரிந்து கட்டிக் கொண்டு உதவி செய்வதற்காக அவர் முன் வந்து நிற்கும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 211, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

211—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***19051–திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2017 ஜூலை 18

(அ) தேனி மாவட்டம், உத்தமபாளையம் ஒன்றியம், மேலசிந்தலைச்சேரி கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை தேனி மாவட்டம், உத்தமபாளையம் ஒன்றியம், மேலசிந்தலைச்சேரி கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யும்பட்சத்தில், இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘கொடுத்ததெல்லாம் கொடுத்தான்,
அவன் யாருக்காக கொடுத்தான்,
ஒருத்தருக்கா கொடுத்தான்,
இல்லை, ஊருக்காகக் கொடுத்தான்’

என்று பாடியவாறு, ஊருக்கெல்லாம் கொடுத்து, கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரராக விளங்கிய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் ஒப்பற்ற ஒரே அரசியல் வாரிசாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற, எங்கள் தங்கத் தலைவி, சமூக நீதி காத்த வீராங்கனை, தொழிலாளர்களின் விடிவெள்ளி என்று நாங்கள் நித்தம் நித்தம் போற்றி வணங்கும் இதய தெய்வம், பெண்ணின் பெருமையை உலகளவிலே நிலை

2017 ஜூலை 18]

நிறுத்திக் கொண்டிருக்கின்ற தங்கத் தலைவி, 32 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆளுகின்ற கட்சியே தமிழகத்திலே மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் என்ற அற்புத சாதனையை நிகழ்த்திக் காட்டிய வரலாற்றுத் தலைவி இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றையதினம் இதயபூர்வமான நட்புக்கு இலக்கணம் வகுத்த பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களையும், அதேபோன்று துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் திரு. டி.டி.வி. தினகரன் அவர்களையும் வணங்குகிறேன். 'போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரி தூற்றுவார் தூற்றட்டும்' என்ற முன்னோர் வாக்கிற்கிணங்க, யார் எதைச் சொன்னாலும், இன்றையதினம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணிய எண்ணங்களை, சொல்லிய திட்டங்களைச் செயல்படுத்தி மிகச் சிறப்பாக ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல பதிலைச் சொல்லியிருக்கின்ற, நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலசிந்தலைச்சேரி கிராமம் என்பது மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாகும். அதனைச் சுற்றியிருக்கின்ற கிராமங்கள் மிக அதிகம். மேலசிந்தலைச்சேரி, கீழசிந்தலைச்சேரி, பல்லவராயன்பட்டி, கோடாங்கிபட்டி, தம்பிநாயக்கன்பட்டி போன்ற இடங்களில் அதிகமான தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய குழந்தைகளின் பள்ளிக் கல்வி சிறக்க, மேலசிந்தலைச்சேரி கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருகிறோம் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில், கடந்த ஆண்டு +2 படித்த மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படாததால், இந்த ஆண்டு கணினி பாடப் பிரிவைத் தேர்வு செய்து, கல்லூரியில் சேர்ந்திருக்கின்ற ஏழையெளிய மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படுகிறது. எனவே, கடந்த ஆண்டு +2 படித்த மாணவர்களுக்கு மடிக்கணினியை உடனடியாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு +2 படித்த மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்க உயர் நீதிமன்றத்தால் தடையாணை பிறக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தில் அந்தத் தடையாணை நீக்கப்பட்ட பின் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, அந்த மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

முற்பகல் 10–05

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை தொகுதி, மேலப்பாளையத்தில் உள்ள கருங்குளம் மாநகராட்சி ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திடவும், அதேபோல் மேலப்பாளையத்தில் உள்ள ஹமீம்புரம் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திடவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூலை 18]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ஜக்கையன் அவர்கள் பேசுகின்றபோது,*

'கொடுத்ததெல்லாம் கொடுத்தான்,
அவன் யாருக்காக கொடுத்தான்,
ஒருத்தருக்கா கொடுத்தான்
இல்லை, ஊருக்காகக் கொடுத்தான்'

என்று சொன்னார்கள். எங்களிடத்தில் 100 இடங்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்காக இருக்கின்றன; உயர்நிலைப் பள்ளிகளுக்கு 150 இடங்கள் இருக்கின்றன. அத்தனையும் உங்களுக்காகத்தான் இந்த அரசு கொடுக்கப் போகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. இராமலிங்கம் அவர்கள்.*

திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மேற்கு தொகுதி, சித்தோடில் உள்ள ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்களுடைய கேள்விக்கு 'நிதிநிலைக்கு ஏற்ப, இந்த அரசு பரிசீலிக்கும்' என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 212, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*